1971 டிசம்பர் 17]

TThiru B. VENKATASWAMI : May I know from the Hon. Minister when Hogenakal tourist bungalow will be completed and what is the estimate for the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஹொகனக்கல டூரிஸ்ட் பங்களா விற்கு தற்போது ரூ. 2½ லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோணையா : தினம் தினம் பல்லாயிரக்கணக்கான மக்கள் ராமேஸ்வரத்திற்குச் செல்கிருர்கள். அதிலும் இந்தியா முழுமையிலுமிருந்து வந்து செல்கிருர்கள். எனவே அந்த இடத்தில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ராமேஸ்வரத்தில் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன. அதற்காக ரூ. ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவுண்டர் வகுப்பினர்

* 535 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டர் சமூகத்தினரை பிற்பட்டோர் பிரிவில் சேர்க்கப்பட வேண்டும் என அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும், வேளாளக் கவுண்டர் வகுப்பினரிடமிருந்தும் முறையீடுகள் வந்துள்ளன. நாட்டு வேளாளக் கவுண்டர் வகுப்பு என்று அழைக்கப்படுகிற கொங்கு வேளாளக் கவுண்டர் வகுப்பு வேளாளக் கவுண்டர் வகுப்பின் ஒரு பிரிவே ஆகும்.

(இ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் 'வேளாளக் கவுண்டர்' வகுப்பினேச் சேர்த்துக்கொள்ளலாமென பின்தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு பரிவுரை செய்யவில்லை, ஆணைக் குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : நமது அரசாங்கம் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாங்கமாகும். இந்த பிற்பட்டோர் பட்டியலில் பல சமூகத்தினர் சேர்க்கப்பட்டு, பெரிய நிலச் சொந்தக்காரர்கள், தொழில் அதிபர்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகளும், உத்தியோகச் சலுகைகளும் தரப்படுகின்றன. ஆனல் கவுண்டர் சமூகத்தினர், விவசாயத் தொழிலாளர்களாகவும், தொழிற்சாலைத் தொழிலாளர்களாகவும் அதிகப்படியானபேர்கள் இருக்கக்கூடிய இந்த சமுதாயத்தை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்காத காரணத்தினல் அச் சமுதாயத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு மேற்குறிப்பிட்ட சலுகைகள் கிடைப்பதில்லை. எனவே இதைக் கருத்தில்கொண்டு அரசாங்கம் நிர்ணயித்துள்ள பிற்பட்டோர் பட்டியலில் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பிற்பட்டோர் பட்டியலில் வேளாளர் கவுண்டர் சமுதாயத்தையும் சேர்க்கவேண்டுமென்று சில விண்ணப்பங்கள் வந்தன. அவற்றைப் பரிசிலிக்கும்போது இப்போது நியமிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் ஆணைக் குழுவில் சில பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகள்படி வேளாளர் சமுதாயத்தில் 60 சதவிகிதம் நிலச்சொந்தக்காரர்களாகவும், அவர்களின் ஆண்டு வருவாய் ஆயிரம் முதல் மூவாயிரம் ரூபாய் வரை உள்ளது என்றும், 30 சதவிகிதம் பயிரிடும் குத்தகைதாரர்கள் என்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 முதல் ரூ. 2,000 வரை உள்ளது என்றும், 10 சதவிகிதம்தான் வேளாண்மைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள் என்றும் ஆகவே இப்போது அவர்களை அந்தப் பட்டியலில் வைக்கத் தேவையில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். திரு. துரைசாமி அவர்கள் ஜாதி மத வேறுபாடு இல்லாத அரசாகும் இந்த அரசு என்று கேள்வியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் இந்த பின்தங்கியோர் நல இலாகாகூட இன்னும் ஒரு பத்தாண்டுகள் வேலைசெய்து எல்லோரையும் ஒரே சமுதாயமாக்கப் பாடுபடுவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Death of Engineer in Ennore Thermal Power Station

* 536 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether an Engineer in Ennore Thermal Power Station, died on 13th September 1969 during working hours; and

(*b*) if so, the reasons therefor and the action taken thereon?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) செக்கோஸ்லாவோகியா நாட்டைச் சேர்ந்த பொறியாளர் திரு. ஜோசப் பிராசக் எண்ணூர் அனல் மின்நிலையத்தில் முதுநிலை மேற்பார்வைப் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அவர், குளிருட்டு குழாயை பரிசோதனை செய்து கொண்டிருக்கையில், அருகே தற்காலிகமாக பொருத்தப்பட்டிருந்த 240 வோல்ட் மின்குமிழ் விளக்கின் உலோகத்திருகுவாளைப் (Metal Cap Holder) பிடித்தார். அதன்விளைவாக மின்சார அதிர்ச்சிக்கு உள்ளாகி, அதிர்ச்சியுற்ற வேகத்தில் தரைமீது விழுந்தார். அவர் விழுந்தபோது அருகிலிருந்த பற்றவைப்புக்கருவிக்குரிய மின் மாற்றியின் கூரான மூலைப்பகுதியில் அவருடைய தலையின் பின்புறம் அடிப்பட்டது. அதன் விளைவாகத் தலையின் பின்புறத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டு, அப்பொறியாளர் மயக்கமுற்றார். அவர், மருத்துவ அதிகாரியிடம் விரைந்து கொண்டு செல்லப்பட்டு, அவருக்குச் செயற்கை முறையில் மூச்சுவிடுவதற்கான சிகிச்சையும், வேறு பிற மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டது. ஆனால் அவருக்கு நினைவு திரும்பவில்லை. உடனடியாக அவர் ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால் அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மின்சார அதிர்ச்சி தலையில் ஏற்பட்ட காயம் இவற்றின் ஒட்டுமொத்த விளைவால் அவர் இறந்தார்.

Dr. H. V. HANDE : May I know that one of the main reasons for this particular accident was the manner in which certain equipments in the Ennore Thermal Scheme was kept and whether it was a fact that they were not properly kept in a proper